# பூவிருந்தவல்லி நகராட்சி
## திருவள்ளூர் மாவட்டம்

ந.க.எண்.3678/2021/E1 நாள்:28.03.2022

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படுகிறது.**

பூவிருந்தவல்லி நகராட்சியின் 15வது நிதிக்குழுமம் Tied மற்றும் Untied grant 2021–22திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 13.04.2022 தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட அல்லது மின்னனு (E-Tender) முறையிலும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினம் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும். இதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 12.04.2022 செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 4.00 மணி வரை உரிய தொகை செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது http://www.tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தினம் எதிர்பாராத விதமாக அலுவலக விடுமுறை அறிவிக்கப்பட்டிருப்பின், அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். எவ்வித காரணமும் அல்லது முன்னறிவிப்புமின்றி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை நிர்வாக காரணங்களின் நிமித்தம் ஒத்தி வைக்கவோ அல்லது காரணம் ஏதும் தெரிவிக்காமல் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவோ முழு அதிகாரம் உண்டு. E-Tender முறையில் ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்தவர்களின் டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி பெற நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னர் அசலாக உரிய இடத்தில் ஒப்படைக்க வேண்டும். ஒப்பந்ததாரர் தகுதி குறித்து விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் இது குறித்தான விவரம் தேவைப்பட்டால் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

### ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகளின் விவரம்

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | முன் வைப்பு தொகை 1% ரூ | பணி முடிக்கும் காலம் | ஒப்பந்ததாரர் நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | பூவிருந்தவல்லி நகராட்சி எல்லைக்குட்பட்ட காட்டுப்பாக்கம் கிராமம், குமணன்சாவடி, பகவதி குளத்தினை மேம்பாடு மற்றும் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 49.00 | மதிப்பீடு தொகையில் 1% | 6 மாதங்கள் | வகுப்பு –II மற்றும் அதற்குமேல் |
| 2. | இயந்திரங்கள் பாதுகாப்பிற்கான இரும்பு தகடு கூடம் அமைத்தல் | 16.50 | மதிப்பீடு தொகையில் 1% | 3 மாதங்கள் | வகுப்பு –II மற்றும் அதற்குமேல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | பூவிருந்தவல்லி டிரங்க் சாலையில் சுகாதார பொருட்களுக்கான இருப்பு, துப்புரவு பணியாளர்களுக்கு 4 கழிவறை மற்றும் 2 குளியலறை அமைத்தல். | 17.90 | மதிப்பீடு தொகையில் 1% | 4 மாதங்கள் | வகுப்பு –II மற்றும் அதற்குமேல் |

28/03/22

ஆணையர்,
பூவிருந்தவல்லி நகராட்சி.

<u>பெறுநர்:-</u>
நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்.
<u>நகல்:-</u> ஆணையாளர் மேஜைக்கு,
<u>நகல்:-</u> பொறியாளர்,
<u>நகல்:-</u> மேலாளர்/கணக்கர்,
<u>நகல்:-</u> பொதுப்பணி மேற்பார்வையாளர், தகவல் பலகை மற்றும் கோப்பிற்கு.

28/3/2022